## கொடைக்கானல் கோட்ட மாவட்ட வன அலுவலரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: டாக்டர்.ப.கொ.திலீப் இ.வ.ப.
மாவட்ட வன அலுவலர் (ம) வன உயிரின காப்பாளர், கொடைக்கானல்.

செ.மு.ஆ.எண். 9218 /2019/ப3 | நாள்.15.06.2023

பொருள் பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - காலஞ்சென்ற திரு.எஸ். கோவிந்தராஜ், வனக்காப்பாளரின் மகன் திரு.கோ.ராஜேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டது - பணியை வரன்முறை செய்து ஆணை வெளியிடுவது - தொடர்பாக

பார்வை
1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் சென்னை ந.க.எண்.ண2/18995/2015 நாள் 26.11.2019
2. வனப்பாதுகாவலர் திண்டுக்கல் மண்டலம் ந.க.எண்.6548/2019/ப1 நாள்.03.12.2019
3. மாவட்ட வன அலுவலர் (ம) வன உயிரினக்காப்பாளர் கொடைக்கானல் வனக்கோட்டம் செ.மு.ஆ.எண்.9218/2019/ப3 நாள் 06.01.2020
4. மாவட்ட வன அலுவலர்(ம) வன உயிரினக்காப்பாளர் கொடைக்கானல் வனக்கோட்டம் ந.க.எண்.9218/2019/ப3 நாள் 22.01.2021
5. அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(க்யூ1) துறை நாள் 08.03.2023
6. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) ந.க.எண்.ண2/19226/2022 நாள் 12.06.2023

*****

**ஆணை:**

திண்டுக்கல் வன மண்டலம், திண்டுக்கல் வனக்கோட்டத்தில் வனக்காப்பாளராக பணியாற்றி வந்தபொழுது 16.09.2007 அன்று திரு.எஸ்.கோவிந்தராஜ், வனக்காப்பாளர் பணியிடை மரணமடைந்ததால் அவரது மகன் திரு.கோ.ராஜேஷ் வனத்துறையில் கருணை அடிப்படையில் பார்வை1, 2 மற்றும் 3-ல் கண்ட கடிதங்களின் வாயிலாக இளநிலை உதவியாளராக 08.01.2020 முற்பகல் முதல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் மேற்படி இளநிலை உதவியாளரின் பணியினை வரன்முறை செய்து தருமாறு பார்வை 4ல் கண்ட கடிதம் வாயிலாக திண்டுக்கல் மண்டல தலைமை வனப்பாதுகாவலர் மூலமாக கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை நாள் 08.03.2023ன்படி பின்வரும்வாறு **TamilNadu Government Gazette** வெளியிடப்பட்டுள்ளது.

**16. Regularization of appointment – Each appointing authority shall regularize the service of the person appointed under these rules within a period of one year from the date of his joining service. Subject to eligibility.**

Scanned by CamScanner

மேலும், பார்வை 6-ல் கண்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை நாள் 08.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு விதித்தளர்வு இருந்தாலும் இல்லாவிட்டாலும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறை செய்து அறிக்கை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் கருணை அடிப்படை பணி நியமனத்திற்கு மற்றும் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேவையான சான்றுகள், வயது, தகுதிகள் போன்றவற்றினை மறு பரிசீலனை செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1)துறை நாள் 08.03.2023-ஐ செயல்படுத்தும் விதமாக திரு. கோ.ராஜேஷ் இளநிலை உதவியாளருக்கு கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட தற்காலிகப் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.01.2020 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மாவட்ட வன அலுவலர் மற்றும்
வனஉயிரின காப்பாளர்
கொடைக்கானல் வனக்கோட்டம்
கொடைக்கானல்

பெறுநர்

திரு.கோ.ராஜேஷ், இளநிலை உதவியாளர், மாவட்ட வன அலுவலகம், கொடைக்கானல் வனக்கோட்டம்

மேற்படி ஆணையினை பெற்று கொண்டு அதன் இரண்டாம் பிரதியில் ஒப்புகையிட்டு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: செயல்முறை ஆணை இருப்புக்கோப்பிற்கு

நகல்: உபரி

Scanned by CamScanner